# அசிசியின் புனித பிரான்சிஸ் நவநாள் செபம்



சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம்

# அசிசியின் புனித பிரான்சிஸ் நவநாள் செபம்

### தொடக்கப் பாடல்:

அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே – 2
அன்பனே இறைவனே என்னிலே வாருமே – 2
அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே

1. பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும் – 2
   வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
   கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும் (அமைதியின்...)

2. தளர்ச்சி ஓங்கும் பொழுது மனதிடம் தழைக்கவும் – 2
   இருளே சூழும் வேளை ஒளியை ஏற்றவும்
   துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும் (அமைதியின்...)

3. ஆறுதல் அன்பை அளித்துப் புரிதலை வளர்க்கவும் – 2
   கொடுப்பதில் நிறைவைக் கண்டு மன்னித்து வாழவும்
   தன்னலம் ஒழித்துப் புதிய உலகம் படைக்கவும் (அமைதியின்...)

### நவநாளின் தொடக்க செபம்:

முத : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
எல் : ஆமென்.

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, உமது அன்பானப் பரிந்துரை வழியாக எல்லாவற்றிற்கும் மேலான புனிதத்தை நாங்கள் நாடுகிறோம். உம்மால் இவ்வுலக வாழ்வுக்குரிய இன்பங்களை மகிழ்வுடன் துறந்து, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாகப் பின்பற்ற உமக்கு உதவிய நம்பிக்கை, எதிர்நோக்கு, பிறரன்பு ஆகியவற்றை நாங்களும் வேண்டுகிறோம். இயேசுவை முன்மாதிரியாகக் கொண்டு, நாங்கள் ஏழை எளியோருடன் சேர்ந்துத் துன்பப்படும் அனுபவத்தைப் பெற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். நாங்கள் பெற்ற ஆசீர்வாதங்கள் அனைத்துக்கும் எப்போதும் நன்றி உள்ளவர்களாக இருக்க எங்களுக்கு உதவியருளும். மேலும், எங்களுக்கு மிகவும் அழுத்தமாகக் கவலை அளிப்பவைகளை சமாளிக்க வல்லமை அளித்தருளும். குறிப்பாக...

*(உங்கள் விண்ணப்பங்களை சிறிது நேரம் மௌனமாக நினைவு கூறவும்)*

### நவநாள் சிறப்பு செபம்: முதல் நாள்

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, நீர் எளிய வாழ்வு வாழவும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பணியாற்றவும், உமது வசதியான வாழ்வை விட்டுச் சென்று, பொருள் ஈட்டுவதிலும், உலக இன்பங்களை அனுபவிப்பதிலும் உள்ள முட்டாள்தனத்தை உணர்ந்தது நாங்களும் உணர எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். இந்த நாளில், எனது மனமாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், என்னிடம் உள்ள இந்த ஒரு உலக ஆசையை நம்

தந்தையாகிய இறைவனுக்குக் காணிக்கையாகத் தாழ்மையுடன் னும் நம்பிக்கையுடனும் புறக்கணிக்க உறுதி கொள்கிறேன். *(உங்கள் உலக ஆசை ஒன்றை நினைவு கூறவும்)*

## நவநாள் சிறப்பு செபம்: இரண்டாம் நாள்

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, நீர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியில் பணியாற்றத் தீர்மானித்த போது, உம் முழு வாழ்வையும் அவருடைய தெய்வீகப் பாதுகாப்பில் ஒப்படைத்தீர். உமது முன்மாதிரியால் துணிவு பெற்று, உமது அன்பானப் பரிந்துரை வழியாக எனது தற்போதையச் சூழ்நிலைக்கு ஏற்றத் தீர்வை நம் தந்தையாகிய இறைவனிடம் இன்று ஒப்படைக்க நான் உறுதியளிக்கிறேன். *(உங்கள் பிரச்சனை ஒன்றை நினைவு கூறவும்)*

## நவநாள் சிறப்பு செபம்: மூன்றாம் நாள்

எல் : புகழ்பெற்ற அசிசியின் புனித பிரான்சிசே, மிகவும் கொடிய உடல் ஆபத்து வேளையிலும் நீர் அமைதியின் தூதராகச் செயல்பட்டுள்ளீர். உமது அன்பானப் பரிந்துரை வழியாக மிகக் கடினமான வேளையிலும், எங்களைத் துன்புறுத்தும் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வைக் காண விரும்புவோமாக. எங்கள் எல்லாம் வல்ல இறைவனாகியத் தந்தைக்குக் காணிக்கையாக, என் சக மனிதர்களிடமிருந்து நான் அனுபவித்த அனைத்து தவறுகளையும் மன்னிக்க இன்று நான் உறுதியளிக்கிறேன். *(உங்கள் சக மனிதர் ஒருவரை நினைவு கூறவும்)*

## நவநாள் சிறப்பு செபம்: நான்காம் நாள்

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, இறைவனின் படைப்புகள் மீதான உமது அக்கறையும் ஆர்வமும், உம்மைச் சுற்றுச் சூழலின் பாதுகாவலர் என நீர் அழைக்கப்படக் காரணமாக அமைந்தது. உமது அன்பானப் பரிந்துரை வழியாக நாங்களும் உமது முன்மாதிரியைப் பின்பற்றி, எல்லாம் வல்ல இறைவனின் அனைத்துப் படைப்புகளையும் நாங்கள் பாதுகாப்போம் எனவும், எங்களுக்குக் கொடுக்கப்பட்டத் திறமைகளையும் திறன்களையும் தந்தையாகிய இறைவனின் மாட்சிக்காகப் பயன்படுத்துவோம் எனவும் இன்று நான் உறுதியளிக்கிறேன். ஆமென்.

## நவநாள் சிறப்பு செபம்: ஐந்தாம் நாள்

எல் : ஆசீர்வதிக்கப்பட்ட அசிசியின் புனித பிரான்சிசே, நீர் நம் தந்தையாகிய இறைவனுக்குப் பணியாற்ற முடிவெடுத்து ஆசீர் பெற்ற போது, நீர் எல்லாவற்றையும் கைவிட்டு, இறைவனின் திருவுளத்திற்கு உம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்தீர். தூய ஆவியார் எங்களது ஒவ்வொரு எண்ணத்தையும், சொல்லையும், செயலையும் வழிநடத்த அதே நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் நாங்களும் பெற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## நவநாள் சிறப்பு செபம்: ஆறாம் நாள்

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, உங்கள் ஜெபங்களின் மூலம், எங்கள் வாழ்வில் கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எங்களின் முழு பலத்தையும், திறன்களையும் வழங்குவதற்கான விருப்பத்துடன் நாங்கள் ஆசீர்வதிக்கப்படுவோம். எங்கள் வாழ்க்கை முழு

நம்பிக்கையாலும், நம் பரலோகத் தகப்பனுடன் நித்தியத்தைக் கழிக்கும் நம்பிக்கையாலும் நிரப்பப்படட்டும். ஆமென்.

## நவநாள் சிறப்பு செபம்: ஏழாம் நாள்

எல் : புகழ்பெற்ற அசிசியின் புனித பிரான்சிசே, நீங்கள் ஏழைகளுக்கான உங்கள் சேவையில் அயராது இருந்தீர்கள். ஒரு நாள் கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியானவர்களாகக் கருதப்படுவதற்கு, இரக்கத்திற்கான அதே திறனையும், நம்மைக் கொடுக்கும் விருப்பத்தையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

## நவநாள் சிறப்பு செபம்: எட்டாம் நாள்

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, நீங்கள் உங்கள் வாழ்க்கையை சுவிசேஷம் செய்வதில் செலவழித்து, பலரை கடவுளிடம் வென்றீர்கள். ஏழைப் பாவிகளான எங்களிடம் இரக்கம் காட்டுமாறு நாங்கள் உங்களை மன்றாடுகிறோம், உங்கள் பரிந்துரையின் மூலம், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய நித்திய ராஜ்ஜியத்தை நோக்கி வாழ்வின் பல சோதனைகளின் மூலம் தொடர்ந்து நம்மை வழிநடத்துவார் என்ற உறுதியுடன் எங்கள் சந்தேகங்களை மாற்றுவார்.

## நவநாள் சிறப்பு செபம்: ஒன்பதாம் நாள்

எல் : எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, அசிசியின் புனித பிரான்சிசின் அன்பான பரிந்துரை வழியாக எங்கள் விண்ணப்பங்கள் நிறைவேறவும், குறிப்பாக *(உங்கள் விண்ணப்பங்களை மௌனமாக நினைவு கூறவும்)*, மேலும் எங்களைச் சூழ்ந்துள்ள அச்சங்களும் கவலைகளும் அகன்று போகவும் அருள் புரிய உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம். இவ்வுலகில் உமது தெய்வீக நோக்கத்தின் கருவிகளாக நாங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## நவநாளின் இறுதி செபம்: *(நவநாள் சிறப்பு செபத்திற்குப் பின் சொல்ல வேண்டும்)*

எல் : அசிசியின் புனித பிரான்சிசே, நாங்கள் எங்கள் பாவங்களுக்காக உண்மையில் மனம் திரும்பவும், இறைவனுடனான நல்லுறவைப் புதுப்பித்து அவரது அருளைப் பெறவும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். உமது பரிந்துரை வழியாக நாங்கள் பெறும் ஆசீர் எங்கள் நம்பிக்கையை ஆழமாக்கவும், விண்ணக நிலைவாழ்வுக்குத் தேவையானவற்றை சேகரிக்கவும் எங்களை ஊக்குவித்து, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் வாழும் எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையுடனும், அவரது திரு மகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுடனும் நிலைவாழ்வை அனுபவிக்க எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.

முத : தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.

எல் : தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

முத : எங்கள் பாதுகாவலரான அசிசியின் புனித பிரான்சிசே…

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## அசிசியின் புனித பிரான்சிஸ் மன்றாட்டு மாலை:

முத: ஆண்டவரே இரக்கமாயிரும்!

எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்!

முத: கிறிஸ்துவே இரக்கமாயிரும்!

எல்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்!

முத: ஆண்டவரே இரக்கமாயிரும்!

எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்!

முத: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எல்: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்.

முத: விண்ணகத்தில் இருக்கும் தந்தையாகிய இறைவா. . .

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

முத: உலகத்தை மீட்ட மகனாகிய இறைவா. . .

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

முத: தூய ஆவியாராகிய இறைவா. . .

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

முத: மூவொரு கடவுளாய் இருக்கிற ஒரே இறைவா. . .

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

**உங்கள் பதில்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

முத : இறைவனின் தாயாகிய தூய மரியே...

முத : அமலோற்பவியாகிய தூய மரியே...

முத : அசிசியின் புனித பிரான்சிஸ் சபையை ஆதரிக்கும் தூய மரியே...

முத : அசிசியின் புனித பிரான்சிசே...

முத : சேராபீமைப் போன்ற குலமுதுவராகிய அசிசியின் புனித பிரான்சிசே...

முத : மிக விவேகமானத் தந்தையாகிய அசிசியின் புனித பிரான்சிசே...

முத : உலக மாயையைப் புறக்கணித்த அசிசியின் புனித பிரான்சிசே...

முத : உலகத் தீயக்குணங்களை வென்ற அசிசியின் புனித பிரான்சிசே...

முத : தவத்தின் முன்மாதிரியான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : தீமைகளை வென்ற அசிசியின் புனித பிரான்சிசே...

முத : மீட்பரான இயேசுவைத் தரிசித்த அசிசியின் புனித பிரான்சிசே...

முத : மீட்பரான இயேசுவைப் பின்பற்றிய அசிசியின் புனித பிரான்சிசே...

முத : இயேசு கிறிஸ்துவின் அடையாளங்களைத் தாங்கிய அசிசியின் புனித பிரான்சிசே...

முத : இயேசு கிறிஸ்துவின் நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்ட அசிசியின் புனித பிரான்சிசே...

முத : இயேசு கிறிஸ்துவின் மாவீரரான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : தெய்வீக வரங்களால் அலங்கரிக்கப்பட்ட அசிசியின் புனித பிரான்சிசே...

முத : தூய்மையின் முன்மாதிரியான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : தாழ்ச்சியின் முன்மாதிரியான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : கற்பின் முன்மாதிரியான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : அருள் மிகப் பெற்ற அசிசியின் புனித பிரான்சிசே...
முத : தவறு செய்பவர்களை சீர்திருத்தும் அசிசியின் புனித பிரான்சிசே...
முத : நோயாளிகளை குணமாக்கும் அசிசியின் புனித பிரான்சிசே...
முத : திருஅவையின் தூணாக விளங்கும் அசிசியின் புனித பிரான்சிசே...
முத : நம்பிக்கையின் பாதுகாவலரான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : குழந்தைகளின் பாதுகாவலரான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : அழிக்க முடியாதக் கவசமான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : ஊடுருவ முடியாதக் கேடயமான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : ஞானப் போராளிகளின் அரணான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : மதவெறியர்களை குழப்புபவரான அசிசியின் புனித பிரான்சிசே...
முத : அவிசுவாசிகளை மனமாற்றிய அசிசியின் புனித பிரான்சிசே...
முத : இறந்தோரை உயிர்ப்பித்த அசிசியின் புனித பிரான்சிசே...
முத : முடவர்களை ஆதரிக்கும் அசிசியின் பிரான்சிசே...
முத : தொழுநோயாளிகளைக் குணப்படுத்திய அசிசியின் புனித பிரான்சிசே...
முத : எங்கள் அனைவருக்காகவும் பரிந்து பேசும் அசிசியின் புனித பிரான்சிசே...
முத : எங்கள் பங்கின்/இருப்பிடத்தின் பாதுகாவலரான அசிசியின் புனித பிரான்சிசே...

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எல் : எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்!
முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எல் : எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்!
முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!

முத : அசிசியின் புனித பிரான்சிசே... எளியப் பாவிகளாகிய உம் பிள்ளைகளை சந்தித்தருளும்.
எல் : இறப்பின் நித்திரையிலிருந்து அவர்களை எழுப்பியருளும்.
முத : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாய் இருக்கும்படி...
எல் : அசிசியின் புனித பிரான்சிசே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : மன்றாடுவோமாக! எங்கள் தந்தையாகிய இறைவா, அசிசியின் புனித பிரான்சிஸின் புண்ணியப் பேறுகளினால் உமது திருஅவையை ஒரு புதுத் துறவரச் சபையாலே பெருகச் செய்தீரே. அவருடைய முன்மாதிரியை நாங்களும் பின்பற்றி, இவ்வுலக மாயைகளைப் புறக்கணிக்கவும், விண்ணக வரங்களுக்கு எப்போதும் நாங்கள் பங்காளிகளாக இருப்பதில் அகமகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அருள் புரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
எல் : ஆமென்.

### அமைதி மன்றாட்டு:

எல் : இறைவா! என்னை உம் அமைதியின் கருவியாக மாற்றும். எங்கே தீமை நிகழ்ந்ததோ அங்கே அன்பையும், எங்கே இருள் சூழ்ந்துள்ளதோ அங்கே ஒளியையும், எங்கே மனவருத்தம் விளைந்துள்ளதோ அங்கே அகமகிழ்வையும், எங்கே ஐயம் தோன்றியுள்ளதோ அங்கே

எதிர்நோக்கையும், எங்கே அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதோ அங்கே நம்பிக்கையையும், நான் விதைத்து வளர்க்க எனக்கு உதவி புரியும். தெய்வீகக் குருவே! ஆறுதல் தேடுவதை விட, ஆறுதல் அளிக்கவும், பிறர் என்னைப் புரிந்து கொள்வதை விட நான் அவர்களைப் புரிந்து கொள்ளவும், அன்பு செய்யப்படுவதை விட அன்பு செய்வதையும் நான் நாடும்படி எனக்கு அருள் புரியும். ஏனெனில், கொடுப்பதால் நாங்கள் பெறுகிறோம், மன்னிப்பதால் மன்னிப்பு பெறுகிறோம், இருப்பதால் நிலைவாழ்வுக்குள் பிறக்கிறோம். ஆமென்.

### அசிசியின் புனித பிரான்சிஸின் ஆசீர்:

இறைவன் உமக்கு ஆசீர் அருள்க! அருள் வளம் ஈந்து காத்தருள் புரிக!
தன் முகம் காட்டி கருணை பொழிக! அமைதியின் அரசர் அமைதி அருள்க!

### இறுதிப் பாடல்:

அன்பால் இசை பாடிடுவோம் – 2, எங்கள்
அசிசியின் பிரான்சிஸ் ஐயா உம்மை வாழ்த்த
அன்பால் இசை பாடிடுவோம் – 2
அன்பால் உம் திரு தேகம் ஒளிரந்திட – 2
உம் திரு உடலின் காயங்கள் மிளிரந்திட (அன்பால்)

1. வான்மதி உடுக்கல் பறவையின் குழுக்கள்
பயன்பெறும் கானக விலங்குகள் பழக்க (2)
வான்மதி வாய்ந்த வறியோனே வாழ்க – 2
வருக எம் பாரத நாட்டினைக் காக்க (அன்பால்)

2. இயேசுவின் வாழ்வை உலகிற்கு ஈந்தாய்
சேவையுன் தரித்திரப் பானியில் பயின்றாய் (2)
உலகின் மாந்தரைத் துணிந்து நீ கவர்ந்தாய் – 2
தென்திசை தமிழகம் தேர்ந்து நீ வளர்வாய் (அன்பால்)